# சிவம் எனும் செம்பொருள்

## பிரிவு 2

என்னை இவ்வுலகில் படைத்த இறைவனுக்கு என் முதல் வணக்கம். பெற்றோர்களுக்கும் நடுவர்களுக்கும் என் அன்பு வணக்கம். நான் இன்று பேச எடுத்துக்கொண்ட விடயம் சிவம் எனும் செம்பொருள் ஆகும்.

கீழ்த்திசை வெளுக்கிறது. இருள் கலைந்து கதிரவனின் கவினொளி படர்கிறது. புறவைகள் இன்னொலி எழுப்புகின்றன. மொட்டவிழ்ந்த மலர்கள் மணம் வீசுகின்றன. எழில் கூட்டுகின்றன. உலகம் புத்தெழில் பெற்றுக் கண் விழிக்கிறது. காலையின் மலர்ச்சியிலே எத்தனை அழகு! எத்தனை இன்பம்!

இந்த அழகும், இன்பமும் நிலைத்து நிற்பதில்லை. சொற்ப நேரத்தில் கலைந்துவிடும். வாழ்வின் ஒவ்வொரு பகுதியும் நிலையற்றது.

இந்த நிலையற்ற தன்மைக்கூடாக மாறுபாடற்ற தன்மை ஒன்றையும் அவன் அறியத் தவறியதில்லை. அந்தப் பண்பைக் கடவுளாகக் கண்டு அதில் தன்னை மறந்து, அமைதியையும், அந்தமில்லாத இன்பத்தையும் அவன் அடைகின்றான்.

மலரின் மணத்திற்கும், காலையின் மலர்ச்சிக்கும், நிலையற்ற மாறுபாட்டிற்கும் காரணமாக இருப்பது இதுவே. கடவுள் என்ற தமிழ்ச் சொல் அனைத்தையும் கடந்தும் அவற்றுள் நிறைந்தும் இருப்பதை உணர்த்துவது.

குறையற்ற நிறைபொருளாக இருக்கும். இச்செம்பொருளை சிவம் என்றனர் எம் முன்னோர். சிவனை கடவுள் என்றும், இறையென்றும் தமிழில் கூறுவர். ஆகமங்களில் பதி என்று இறைவன் அழைக்கப்படுகின்றான். சிவனை முழுமுதல் கடவுளாக கொண்டு வழிபடும் சமயம் சைவ சமயமாகும்.

சிவம் என்ற சொல்லுக்கு மங்கலம் என்பது பொருள். பதி என்பதற்கு தலைவன் என்பது பொருள். சிவனை செம்பொருளாகக் கண்டு போற்றியவர் தென்னாட்டவர். ஆயினும், அவன் எல்லா நாட்டினர்க்கும் உரியவன். இதனை மாணிக்கவாசக சுவாமிகள்

தென்னா டுடைய சிவனே போற்றி
என்னாட் டவர்க்கும் இறைவா போற்றி என்று பாடுவதைக் காணலாம்.

சிவனை நின்மலன் என்றும் அழைப்பர். உயிர்கள் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலத் தொடர்புடையன. மலத்தினால் கட்டப்பட்டுள்ளன. உயிர்களின் இக்குறையை நீக்கி, அவற்றை உயர்நிலை அடையச் செய்பவன் இறைவன். மலத்தொடர்பும் எவ்விதக் கட்டுப்பாடுமில்லாத பேராற்றலும் கொண்டவன் இறைவன். ஆதலால் இறைவன் நின்மலன் என்று அழைக்கப்படுகின்றான்.

எங்கும் நிறைந்து இருக்கும் இறைவனை நாம் உணர்ந்து வாழ்தல் நம் கடமை என்று கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.